4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2010-2011, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010–2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து (குறுக்கீடு) என்ன வேண்டும்? திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஐந்து நிமிடங்கள்* break *கொடுத்தால் வெளியே போய் காபி, டீ, சாப்பிட்டுவிட்டு உள்ளே திரும்ப வருவார்கள். அவ்வாறு கொடுக்கலாம்.* Rules*–ல் இடம் இருக்கிறது.*

ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் தேநீர் அருந்திவிட்டு வரலாம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Demand *எடுத்த பிறகு நீங்கள்தான் போய் வருவீர்களே! (குறுக்கீடு) உட்காருங்கள்.*

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010–2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the financial year 2010-2011 as detailed in the annexure."

முற்பகல் 11–30

5. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்

கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*